**சுருக்கம்**

தொழில் – சிப்காட் நிலை–V தொழிற்பேட்டை – நில எடுப்பு – கிருஷ்ணகிரி மாவட்டம் – தேன்கனிக்கோட்டை வட்டம் – நாகமங்கலம் கிராமம் – புல எண் 32/1 (பகுதி) முதலான 491.00.03 ஹெக்டேர் (1212.77 ஏக்கர்) பட்டா நிலங்கள் நில எடுப்பு – புல எண் 46/2 முதலான 92.36.00 ஹெக்டேர் (228.13 ஏக்கர்) புறம்போக்கு நிலங்கள் நில உரிமை மாற்றம் – தமிழ்நாடு தொழிலியல் நோக்கங்களுக்கான நிலஎடுப்புச் சட்டம் 1997 (தமிழ்நாடு சட்டம் 10/1999)–ன் கீழ் (அல்லது) தனிநபர் பேச்சுவார்த்தை மூலம் கையகப்படுத்துதல் மற்றும் தற்காலிகப் பணியிடங்கள் ஏற்படுத்துதல் – நிருவாக அனுமதி – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

**தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தக(சிப்காட்–நி.எ)த் துறை**

**அரசாணை (நிலை) எண்.221**

**நாள்: 03.11.2022**
**சுபகிருது வருடம், ஐப்பசி 17,**
**திருவள்ளுவர் ஆண்டு – 2053**

**படிக்க:**

1) சிப்காட் மேலாண்மை இயக்குநரின் கடித எண்.LA/Nagamangalam/K.Giri/2021, நாள் 27.8.2021 & 4.10.2021.
2) கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியரின் கடித ந.க.எண்.51/2020/சிப்காட்/கி.கிரி, நாள் 28.3.2022.
3) நில நிர்வாக ஆணையரின் கடித எண்.ஜே1/2244970/22, நாள் 23.5.2022.

******

**ஆணை:**

பார்வை இரண்டில் படிக்கப்பட்ட கடிதத்தில், கிருஷ்ணகிரி மாவட்டம், தேன்கனிக்கோட்டை வட்டம், நாகமங்கலம் கிராமத்தில் புல எண் 32/1 (பகுதி) முதலானவற்றில் 491.00.03 ஹெக்டேர் (1212.77 ஏக்கர்) பட்டா நிலங்கள் மற்றும் புல எண் 46/2 முதலானவற்றில் 92.36.00 ஹெக்டேர் (228.13 ஏக்கர்) புறம்போக்கு நிலங்களில் சிப்காட் நிலை–V தொழிற்பேட்டை அமைக்கும் பொருட்டு தமிழ்நாடு தொழிலியல் நோக்கங்களுக்கான நிலஎடுப்புச் சட்டம் 1997 (தமிழ்நாடு சட்டம் 10/1999)–ன் கீழ் நிலஎடுப்பு/நில உரிமை மாற்றம் செய்ய

அரசின் நிர்வாக அனுமதி மற்றும் நிதி ஒதுக்கீடு வழங்க கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் கோரியுள்ளார். அதன்படி, நில எடுப்பு மற்றும் நில உரிமை மாற்றம் செய்யப்படவுள்ள நிலங்களின் விவரம் :-

| வ. எண் | வகைப்பாடு | பட்டா | | அரசு புறம்போக்கு | | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| | | புல எண். | பரப்பு (ஹெக்டேரில்) | புல எண். | பரப்பு (ஹெக்டேரில்) | |
| 1. | நஞ்சை | 52/1G | 23.93.23 | – | – | 23.93.23 |
| 2. | புஞ்சை | 32/1 (பகுதி) மற்றும் பல | 467.06.80 | – | – | 467.06.80 |
| 3. | அரசு புறம்போக்கு (தீர்வை ஏற்படாத தரிசு, அ.நஞ்சை, அ.புஞ்சை மற்றும் அ.தரிசு) | – | – | 46/2 மற்றும் பல | 91.31.50 | 91.31.50 |
| 4. | நத்தம் | – | – | 234 மற்றும் பல | 1.04.50 | 1.04.50 |
| | மொத்தம் | – | 491.00.03 | – | 92.36.00 | 583.36.03 |

மேலும், மேற்காணும் நில எடுப்பு/நில உரிமை மாற்றம் பணிகளுக்காக அரசாணை எண்.286, வருவாய் துறை, நாள் 10.6.1996-ன்படி 5 அலகுகள் கொண்ட சிறப்பு பணியிடங்களை ஏற்படுத்தவும் கோரியுள்ளார்.

2. பார்வை மூன்றில் படிக்கப்பட்ட கடிதத்தில் மேற்படி கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சித் தலைவரின் கருத்துருவினை ஏற்று ஆணைகளை வெளியிடுமாறு நில நிர்வாக ஆணையர் பரிந்துரைத்துள்ளார்.

3. மேற்காணும், கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியரின் கோரிக்கை மற்றும் நில நிர்வாக ஆணையரின் பரிந்துரையினை அரசு கவனமுடன் பரிசீலித்து, கிருஷ்ணகிரி மாவட்டம், தேன்கனிக்கோட்டை வட்டம், நாகமங்கலம் கிராமத்தில் சிப்காட் நிலை-V தொழிற்பேட்டை அமைக்க புல எண் 32/1 (பகுதி) முதலான 491.00.03 ஹெக்டேர் (1212.77 ஏக்கர்) நஞ்சை & புஞ்சை பட்டா நிலங்கள் மற்றும் புல எண் 46/2 முதலான 92.36.00 ஹெக்டேர் (228.13 ஏக்கர்) அரசு புறம்போக்கு நிலங்கள் முறையே நில எடுப்பு/நில உரிமை மாற்றம் செய்ய தமிழ்நாடு தொழிலியல் நோக்கங்களுக்கான நிலஎடுப்புச் சட்டம் 1997 (தமிழ்நாடு சட்டம் 10/1999)-ன் கீழ் அல்லது நேரடி பேச்சு வார்த்தையின் மூலமாக நிலஎடுப்பு

செய்திட கீழ்காணும் நிபந்தனையுடன் நிருவாக அனுமதி வழங்கி அரசு ஆணையிடுகிறது:-

(i) சட்டப்பிரிவு 3(2)-இன்படியான அறிவிக்கையில் குடியிருப்பாக உள்ள நிலங்களை (Residential sites) தவிர்த்து நில எடுப்பு செய்யலாம்.

(ii) நிலமதிப்பு கணக்கீடு செய்யப்படும் பொழுது அரசாணை (நிலை) எண்.29, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, நாள் 24.01.2019 மற்றும் அரசாணை (நிலை) எண்.411, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, நாள் 06.08.2020-இல் உள்ள வழிமுறைகளை பின்பற்றலாம்.

4. மேற்காணும் நில எடுப்பு பணிகளை மேற்கொள்ள 3 அலகு பணியிடங்களுக்கு மட்டும் அனுமதி வழங்கி பின்வரும் 39 புதிய சிறப்பு பணியிடங்களை தற்காலிகமாக தோற்றுவிக்க ஆணை வழங்கப்படுகிறது:-

| வ. எண். | பதவியின் பெயர் | 1 அலகிற்கு பணியாளர்கள் எண்ணிக்கை | 3 அலகிற்கான பணியாளர்களின் எண்ணிக்கை | ஊதிய விகிதம் |
|---|---|---|---|---|
| 1. | தனி வட்டாட்சியர் | 1 | 3 | Level-20 Rs.37700-119500 |
| 2. | உதவியாளர் | 1 | 3 | Level-10 Rs.20600-65500 |
| 3. | வருவாய் ஆய்வாளர் (உதவியாளர் நிலை) | 2 | 6 | Level-10 Rs.20600-65500 |
| 4. | தட்டச்சர் | 1 | 3 | Level-8 Rs.19500-62000 |
| 5. | சார் ஆய்வாளர் (நில அளவை) | 2 | 6 | Level-11 Rs.35400-112400 |
| 6. | வரைவாளர் | 1 | 3 | Level-8 Rs.19500-62000 |
| 7. | புல உதவியாளர் | 4 | 12 | Level-1 Rs.15700-50000 |
| 8. | அலுவலக உதவியாளர் | 1 | 3 | Level-1 Rs.15700-50000 |
| **மொத்தம்** | | **13** | **39** | |

இப்பணியிடங்கள் நடைமுறையில் உள்ள விதிகள்/அறிவுறுத்தங்களின் அடிப்படையில் நிரப்பப்பட வேண்டும் என கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியருக்கும் இதற்கான நிதி ஒப்பளிப்பு செய்ய சிப்காட் நிறுவனத்திற்கும் அறிவுறுத்தப்படுகிறது.

5. மேலும் கிராமங்களிலுள்ள அரசு புறம்போக்கு நிலங்களை சிப்காட் நிறுவனத்திற்கு நில உரிமை மாற்றம் செய்வதற்குரிய உரிய முன்மொழிவினை நில நிர்வாக ஆணையர் வழியாக அரசின் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறைக்கு அனுப்பி வைக்குமாறும் கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியருக்கு அறிவுறுத்தப்படுகிறது.

6. மேலே பத்தி 4-ல் அனுமதிக்கப்பட்டுள்ள பணியாளர்களின் (நில எடுப்பு) ஊதிய செலவினம் மற்றும் நிருவாகச் செலவினமாக முதற்கண் ரூ.1,41,81,732/- (ரூபாய் ஒரு கோடியே நாற்பத்தொன்று இலட்சத்து எண்பத்தொன்றாயிரத்து எழுநூற்று முப்பத்தி இரண்டு மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்யப்படுகிறது.

7. கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் தோராயமாக நிர்ணயிக்கும் நிலமதிப்பினை சிப்காட் நிறுவனத்தால் கீழ்காணும் கணக்கு தலைப்பில் வைப்பீடு (Deposit) செய்யப்பட வேண்டும்:-

"K – வைப்பீடுகள் மற்றும் முன்பணங்கள் (b) வட்டி பெறா வைப்பீடுகள் – 8443-00 உரிமையியல் வைப்பீடுகள் – 101 வருவாய் வைப்பீடுகள் – AA வருவாய் வைப்பீடுகள் – 801 – வரவுகள் – 02 – வட்டி பெறா வைப்பீடுகள்.

(ததொகு 8443-00-101- AA- 801 02) (வரவுகள்)"

8. நிலம் கையகப்படுத்தும் அலுவலர்களுக்கான 2022-2023 மற்றும் 2023-2024 ஆம் ஆண்டிற்கான சம்பளம் மற்றும் ஏனைய தொகையை, சிப்காட் நிறுவனத்திடமிருந்து பெற்று கீழ்காணும் கணக்குத் தலைப்பில் வரவு வைக்கப்படவேண்டும்:-

"0070 ஏனைய நிருவாகப் பணிகள் 60 – ஏனைய பணிகள் – 800 ஏனைய வரவுகள் – CH தனியார், பொதுத் துறைகளுக்காகச் செய்யப்பட்ட நிலம் கையகப்படுத்தும் பணி மற்றும் மத்திய அரசு தொடர்பான திட்டப் பணிக்காக செய்த நிருவாகப் பணி குறித்த பணியாளரமைப்புச் செலவை ஈடு செய்தல் – 227 – வரி அல்லாத கட்டணங்கள் 99 – ஏனையவைகள் (ததொகு 0070-60-800-CH 227 99) "

9. நிலம் கையகப்படுத்தும் அலுவலர்களுக்கான சம்பளம் மற்றும் ஏனைய செலவினை கீழ்காணும் கணக்குத் தலைப்பில் பற்று வைக்கப்பட வேண்டும்:-

2053-00 – மாவட்ட நிருவாகம் – 094 ஏனைய பணியாளரமைப்பு – மாநிலச் செலவினங்கள் – AN தொழில் வளர்ச்சி மையங்களுக்காக

சிப்காட் நிறுவனத்திற்கு நிலம் கையகப்படுத்துவதற்கான பணியாளரமைப்பு

(ரூபாயில்)

| | |
|---|---|
| 301 சம்பளங்கள் 01 அடிப்படைச் சம்பளம் (ததொகு 2053-00-094-AN- 301 01) | 1,03,08,200/- |
| 301 சம்பளங்கள் 02 மருத்துவப்படி (ததொகு 2053-00-094-AN-301 02) | 2,38,600/- |
| 301 சம்பளங்கள் 06 வீட்டு வாடகைப்படி (ததொகு 2053-00-094-AN-301 06) | 4,67,600/- |
| 303 அகவிலைப்படி-01 அகவிலைப்படி (ததொகு 2053-00-094-AN-303 01) | 31,67,332/- |

* 2023-2024 மற்றும் அடுத்தடுத்த எதிர்வரும் நிதியாண்டிற்கு தேவைப்படும் சம்பளச் செலவினத் தொகையை 2022-2023-ஆம் ஆண்டு திருத்த மதிப்பீடு/இறுதி திருத்த நிதியொதுக்கத்தின் மற்றும் ஒவ்வொரு ஆண்டும் வரவு-செலவு திட்டத்தில் சேர்க்கும் வகைகளில் உரிய கருத்துருவை அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

10. இத்திட்டத்திற்கான நில எடுப்பு பணி முடிவடைந்த பின் செலவுகள் அனைத்தும் உரிய கணக்கு தலைப்பிற்கு, உரிய முறையில் மாற்றம் செய்யப்படவேண்டும். மேலும், இத்திட்டத்தில் மேற்கொள்ளப்படும் செலவினை கவனித்து அவற்றினை உரிய அரசு கணக்குத் தலைப்பில் வைப்பு செய்வதை கண்காணிக்கும்படியும் நில நிர்வாக ஆணையர் அறிவுறுத்தப்படுகிறார்.

11. மேலே பத்தி-6ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தை மேற்கொள்ள தேவையான கூடுதல் நிதியொதுக்கம் ரூ.1,41,81,732/-, 2022-2023 ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடு/இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். அத்தகைய ஒதுக்கீட்டை எதிர்நோக்கி, மேலே பத்தி 6-ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தை மேற்கொள்ள நில நிர்வாக ஆணையர், சென்னை-5 அவர்களுக்கு அனுமதியளிக்கப்படுகிறது. மேலும், இச்செலவினம் 2022-2023 ஆம் ஆண்டிற்கான துணை மதிப்பீட்டில் (Supplementary Estimate) சேர்க்கப்பட்டு, சட்டமன்றப் பேரவையின் கவனத்திற்கு ஒரு சிறப்பு நிகழ்வாக எடுத்துச் செல்லப்பட வேண்டும். இச்செலவினத்தை 2022-2023 ஆம் ஆண்டிற்கான துணை மதிப்பீடுகளில் சேர்ப்பதற்கும் மற்றும் திருத்த மதிப்பீடு/இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் சேர்ப்பதற்கும் தனித்தனியாக கருத்துருக்களை உரிய நேரத்தில் நிதி (தொழில்கள்/வ.செ.பொ-1) துறைக்கு அனுப்புமாறு நில நிருவாக ஆணையர், சென்னை-5 அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

12. இவ்வாணையானது நிதித்துறை அ.சா.கு.எண்.44077/ நிதி(தொழில்)/2022, நாள் 3.11.2022-ன் ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

இதற்கான கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண்.1498 (ஆயிரத்து நானூற்று தொன்னூற்று எட்டு) (IFHRMS ASL No.2022101498) PSL 202211 PSL 0333.

(ஆளுநரின் ஆணைப்படி)

ச. கிருஷ்ணன்
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

பெறுநர்:

நில நிர்வாக ஆணையர்,
சேப்பாக்கம், சென்னை – 600 005.

மேலாண்மை இயக்குநர்,
சிப்காட்,
19–A, ருக்மணி லஷ்மிபதி சாலை,
எழும்பூர், சென்னை – 600 008.

மாவட்ட ஆட்சியர், கிருஷ்ணகிரி மாவட்டம்.

சிறப்பு மாவட்ட வருவாய் அலுவலர் (நி.எ.)
சிப்காட் ஓசூர் தொழில் வளாகம்,
HIG எண்.39, TNHB, பகுதி –2, 100 அடி சாலை,
கட்டிகானபள்ளி, கிருஷ்ணகிரி – 635 001.

முதன்மை பொது கணக்காயர் (சி.ஏ), சென்னை – 600 018.

முதன்மை கணக்காயர் (தணிக்கை), சென்னை – 600 018.

மாவட்ட கருவூல அலுவலர், கிருஷ்ணகிரி மாவட்டம்.

துணை கருவூல அலுவலர், தேன்கனிக்கோட்டை வட்டம்,
கிருஷ்ணகிரி மாவட்டம்.

நகல்:

மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், தலைமைச் செயலகம், சென்னை – 600 009.

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை(நி.நி.2)த் துறை,
தலைமைச் செயலகம், சென்னை – 600 009.

தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தக (அ.ந.மு. II/ஜிஜஎம்)த் துறை,
தலைமைச் செயலகம், சென்னை – 600 009.

நிதி (வருவாய்/வ.செ.பொ.–I/II/வ.வ. I/ தொழில்/ஊதிய பிரிவு/மை.ம.ஆ.பி)த் துறை,
தலைமைச் செயலகம், சென்னை – 600 009.

இ.கோப்பு/உதிரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

ஜெகவள்ளி
3-11-2022

பிரிவு அலுவலர்

3/11/2022